# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.த.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8066965

1. District : விழுப்புரம் மாவட்டம் | PS: ஊ.த.க. பிரிவு காவல்நிலையம் | Year: 2019 ஆண்டு | FIR No.: 8/19 மு.த.அ. எண் | Date: 07.06.2019 நாள்

2. (i) Act சட்டம்: Prevention of Corruption | Sections பிரிவுகள்: 7

   (ii) Act சட்டம்: Act 1988 as amended by | Sections பிரிவுகள்:

   (iii) Act சட்டம்: PC Act (Amendment) 2018 | Sections பிரிவுகள்:

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் 27.05.2019 | Date from : நாள் முதல் | Date to : நாள் வரை

   Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் | Time to : நேரம் வரை

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 6.6.2019 | Time : நேரம் 16.00

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் | Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — வாக்குமூலம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் — சுமார் 50 மீட்டர் வடகிழக்கே

   Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி — மாவட்ட [illegible] வளாகம், விழுப்புரம்.

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் — A. மணிகண்டன் | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் — ஆறுமுகம்

   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு | (d) Nationality : நாட்டினம் — இந்திய | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

   Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்

   (f) Occupation : தொழில் — பணிமாற்[illegible] [illegible] | (g) Address : முகவரி — தந்தை பெரியார் நகர், விழுப்புரம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   திரு. இராவணன், பணிமேற்பார்வையாளர், நெடுஞ்சாலைத்துறை, [இடை [illegible] 11405]

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   தகவல் சேகரிப்பதால் தாமதம்.

GCP-240-34(Type-2) 90,000 Cps -2T 3 16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

—

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்) —

Submitted on 06.06.2019 at about 16.00 hrs, while I was in my office one Tr.A.Manikandan, S/o.Arumugam residing at Thanthai Periyar Nagar, Viluppuram approached my detachment office and lodged a written complaint which read as follows:- அனுப்புதல் A.மணிகண்டன் வயது-43 S/o ஆறுமுகம் தந்தை பெரியார் நகர் விழுப்புரம் அய்யா:- நான் கடந்த 2004-ஆம் ஆண்டு முதல் விழுப்புரம் மாவட்டத்தில் டாஸ்மாக் விற்பனையாளராக பணிபுரிகின்றேன். நான் M.A. வரலாறு படித்துள்ளேன். தற்பொழுது கடந்த ஐந்து வருடங்களாக விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி தாலூக்கா சங்கீதமங்கலம் டாஸ்மாக் மதுபான கடைஎண் -11674-ல் விற்பனையாளராக பணிபுரிந்தேன். நான் தினந்தோறும் விழப்புரத்திலிருந்து சங்கீதமங்கலம் கடைக்கு சென்றுவர சுமார் 80 கி.மீ ஆகிறது என்பதாலும் எனக்கு மேற்படி அலைச்சலால் அடிக்கடி உடல்நிலை சரியில்லாமல் போவதால் விழப்புரம் பகுதியிலுள்ள டாஸ்மாக் மதுபான கடைகளில் ஏதேனும் ஒன்றில் விற்பனையாளராக மாறுதல் செய்து பணியமர்த்தக்கோரி பலமுறை விழுப்புரம் மாவட்ட டாஸ்மாக் DM அவர்களுக்கு மனு கொடுத்துள்ளேன். ஆனால் நான் கொடுத்த பணி மாறுதல் தொடர்பாக எந்த வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. பின்னர் நான் திருச்சி SRM அவர்களுக்கு தபால் மூலமாக எனக்கு விழுப்புரம் பகுதியிலுள்ள டாஸ்மாக் கடைகளுக்கு பணி மாறுதல் செய்ய உத்தரவிடக்கோரி மனு அனுப்பினேன். அதற்குப் நடவடிக்கை இல்லை. பின்னர் 2018 -ம் ஆண்டு (தேதி, மாதம் ஞாபகம் இல்லை) திருச்சி SRM (பெயர் தெரியவில்லை) அவர்களை சந்தித்து மனு கொடுத்தேன். அதன்படி திருச்சி SRM அவர்கள் அப்போது விழுப்புரம் மாவட்டம் DM ஆக பணியாற்றிய விஜயசண்முகம் அவர்களிடம் எனக்கு விழுப்புரம் பகுதியில் பணிமாறுதல் செய்து உத்தரவிட சொல்லி தெரிவித்திருந்தார். பின்னர் முன்னால்

(Continued in separate sheet)

7/6/19

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.......................................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

7/6/2019

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

7/6/19

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
07.06.2019

Name: பெயர் ..............................
Rank: நிலை ....................No. எண் ........

DM விஜயசண்முகம் அவர்கள் என்மீது கோபம் கொண்டு எவ்வாறு SRM திருச்சியை சந்திக்கலாம் என்று சொல்லி காழ்புணர்ச்சி காரணமாக நான் பணியாற்றிய சங்கீதமங்கலம் டஸ்மாக் கடையை திடீர் ஆய்வு செய்து என்னை சஸ்பெண்ட் செய்துவிட்டார். பின்னர் நான் கடந்த 26.04.2019 அன்று தற்போதைய டாஸ்மாக் DM குமார் அவர்களின் விக்கிரவாண்டி தாலுக்கா குண்டலபுலியூர் கடை எண் 11405 -ல் பணியமர்த்த உத்தரவிட்டார். பின்னர் நான் மேற்படி பணியாணை எடுத்துக்கொண்டு குண்டலபுலியூர் டாஸ்மாக் சூப்பர்வைசர் சரவணனை சந்தித்து கடை எண் 11405 ல் விற்பனையாளராக பணி செய்ய அனுமதி வழங்க கேட்டபோது அவர் எனது பணி ஆணையை பெற்றுக்கொண்டு எனக்கு ஏதாவது செல்வு செய்தால்தான் பணி செய்ய விடுவேன், இல்லையென்றால் நீ தினமும் கையெழுத்து போட்டுவிட்டு வீட்டுக்கு போய்விடு கடைக்குள் அனுமதியில்லையென்று கோபமாக பேசினார். நான் அவரிடம் சரி என்று சொல்லிவிட்டு இரண்டு நாட்கள் கையேழுத்து போட்டுவிட்டு வீட்டுக்கு சென்றுவிட்டேன். பின்னர் 30.04.2019 அன்று DM குமார் அவர்களை சந்திக்க முயற்சித்தேன் முடியவில்லை. கடந்த 27.05.2019 அன்று டாஸ்மாக் சூப்பர்வைசர் சரவணனிடம் எனக்கு ஏன் கடையில் பணி கொடுக்க மறுக்கிறீர்கள் கடையில் பணம், மற்றும் இதர பொருட்கள் காணாமல்போனால் நானும் பொறுப்பாவேன். ஆகையால் கடையின் உள்ளே பணி செய்ய அனுமதிக்குமாறு கேட்டேன். உடனே அவர் எனக்கு ரூபாய் 10,000/- ஆயிரம் லஞ்சமாக பணம் கொடுத்தால் தான் என்னை கடையின் உள்ளே பணி செய்ய அனுமதிப்பேன் என்றும் இல்லையேல்அனுமதிக்க முடியாது என்றும் கராராக கூறிவிட்டார். பின்னர் நான் கடந்த 28.05.2019 அன்று DM குமார் அவர்களை அலுவலகத்தில் சந்தித்து மேற்படி பிரச்சனை பற்றி சொன்னேன். உடனே அவர் என்னை பார்த்து சூப்பர்வைசர் சரவணன் என்ன சொல்றாரோ அதை கேலு என்னிடம் இனி இந்தப்பிரச்சனையை கொண்டுவராதே என்று கூறி அனுப்பிவிட்டார். எனக்கு டாஸ்மாக் சூப்பர்வைசர் சரவணன் லஞ்சமாக கேட்ட தொகை ரூபாய் 10,000/- கொடுத்து பணி செய்ய விருப்பமில்லை. மேலும் எனது மகன்களுக்கு பள்ளி கட்டணம் செலுத்தவேண்டி இருந்ததால் அதனை செலுத்தி ஜூன் 3ம் தேதி பள்ளிக்கு அனுப்பிவிட்டு பின்னர் ரூபாய் 10,000/- ரெடி செய்து ரம்ஜான் கழித்து இன்று தங்களிடம் புகார் கொடுத்தேன். எனவே எனக்கு பணிசெய்ய விடாமல் தடுத்தும் லஞ்சமாக பணம் கேட்ட சூப்பர்வைசர் சரவணன் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். (S.D) A.Manikandan 6.6.19. அய்யா நான் இன்று 06.06.2019 ந் தேதி மாலை 16.00 மணிக்கு வாதி நேரடியாக விழுப்புரம் ஊ.த.க பிரிவில் ஆஜராகி எழுத்து மூலமாக கொடுத்த மேலே கண்ட புகாரை பெற்று, பின்னர் மேற்படி புகாரின் உண்மை தன்மையை ஆராய ரகசிய விசாரணை செய்ய சம்பவ இடம் புறப்பட்டு செல்கிறேன். (S.D) M.Sathish. அய்யா, மேற்படி புகாரின் உண்மை தன்மையை பற்றி ரகசிய விசாரணை செய்ததில் பிடிக்ககூடிய வழக்கு பதிவு செய்வதற்கான குற்ற முகாந்திரம் இருந்ததால் இன்று 07.06.2019 ம் தேதி காலை 08.00 மணிக்கு விழுப்புரம் ஊ.த.க பிரிவு Cr.No.08/2019/AC/VPM u/s 7 of The Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 ன் படி வழக்கு பதிவு செய்யப்பட்டது. (S.D) M.Sathish மேற்படி பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் உண்மை நகலுடன் வாதியின் அ.சல் மனுவை இணைத்து சிறப்பு நீதிபதி அவர்கள், ஊழல் தடுப்பு சட்ட வழக்குகள், விழுப்புரம் அவர்களுக்கும் இதர நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டது.

காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
விழுப்புரம்.